மறைந்த இவ்வுறுப்பினருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

(அ) இலங்கைப் பகுதிக்குக் காற்றின் வேகத்தால் இழுத்துச் செல்லப்பட்ட மீனவர்களை விடுவித்தல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் இரண்டு அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள்; அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1-6-2011 அன்று இராமேஸ்வரம் தங்குதளத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 707 மீன்பிடி விசைப் படகுகளில் இராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த டி.என். 10/எம்.எப்.பி./581 என்ற விசைப் படகு மற்றும் அதில் மீன் பிடிக்கச் சென்ற 5 மீனவர்கள் மற்றும் டி.என்.12/எம்.எப்.பி./252 என்ற விசைப் படகு மற்றும் அதில் மீன் பிடிக்கச் சென்ற 4 மீனவர்களைத் தவிர, இதர படகுகள் மற்றும் மீனவர்கள் கரை திரும்பிவிட்டனர். இந்த இரண்டு படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 9 மீனவர்களும், மண்டபம் பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற இன்னொரு மீன்பிடி விசைப் படகான டி.என்.09/எம்.எப்.பி./153 என்ற விசைப் படகும், அதில் மீன் பிடிக்கச் சென்ற 4 மீனவர்களும் கரை திரும்பவில்லை. இராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த 2 மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் அதில் மீன் பிடிக்கச் சென்ற 9 மீனவர்கள் மற்றும் மண்டபம் பகுதியினைச் சேர்ந்த ஒரு மீன்பிடி விசைப் படகு மற்றும் அதில் மீன் பிடிக்கச் சென்ற 4 மீனவர்கள், ஆக மொத்தம் 13 மீனவர்களையும், 3 விசைப் படகுகளையும் கடலோரக் காவல் படை மற்றும் இந்தியக் கப்பற்படைமூலம் கடல் மற்றும் ஆகாய மார்க்கமாகத் தேடிக் கண்டுபிடிக்க 2-6-2011 அன்று எனது அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.*

2011 ஜூன் 8] [செல்வி ஜெ ஜெயலலிதா]

கடலோரக் காவல் படையினரால் தேடுதல் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த தருணத்தில், காணாமல் போன 3 விசைப் படகுகளில் இராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த டி.என்.10/எம்.எப்.பி./581 என்ற விசைப் படகும், அதில் மீன்பிடிப்பு மேற்கொள்ளச் சென்ற 5 மீனவர்களும் மற்றும் மண்டபம் பகுதியினைச் சேர்ந்த டி.என்.09/எம்.எப்.பி./153 என்ற மீன்பிடி விசைப் படகும், அதிலிருந்த 4 மீனவர்களும், ஆக மொத்தம் 9 மீனவர்களும் மீட்புப் படகுகள் உதவியுடன் 3-6-2011 அன்று காலை பத்திரமாகக் கரை திரும்பிவிட்டனர். இராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த டி.என்.12/எம்.எப்.பி./252 என்ற பதிவு எண் கொண்ட ஒரு படகு மட்டும் மோசமான பருவ நிலை காரணமாக காற்றின் வேகத்தால் இலங்கையிலுள்ள நெடுந்தீவு அருகிலுள்ள பகுதிக்கு இழுத்துச் செல்லப்பட்டு அங்கு அப்படகு மூழ்கியதாகவும், அப்படகில் சென்ற இராமேஸ்வரத்தைச் சேர்ந்த திரு. மூக்குத் துரையின் மகன் திரு. ஜெயக்குமார், வயது 45, திரு. தேவக்குமார் மகன் திரு. பிரபாத், வயது 28, திரு. திவ்யநாதன் மகன் திரு. சுந்தர், வயது 50, திரு. கருப்பையா மகன் திரு. மாரிமுத்து, வயது 45, ஆகிய நான்கு மீனவர்களும் எட்டு மணி நேரம் நடுக்கடலில் தத்தளித்து நீந்தி, இலங்கையிலுள்ள நையினாத் தீவில் பத்திரமாகக் கரை சேர்ந்ததாகவும் தகவல் பெறப்பட்டது.

முற்பகல் 10-05

இந்த நான்கு மீனவர்களும் இலங்கை ஊர்க் காவல் படையினரால் காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தகவல் பெறப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்திற்குத் தெரிவித்து, இச்செய்தியை உறுதி செய்திடுமாறும், மேற்குறித்த மீனவர்களுக்கு உரிய அனைத்து உதவிகளையும் செய்திடுமாறும், அவர்களை விரைவில் விடுவித்து தமிழகத்திற்கு அனுப்பி வைத்திட உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அரசால் 3-6-2011 அன்று நிகரிச் செய்தி அனுப்பப்பட்டது. மேலும், தொலைபேசி மூலமும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்த 4 மீனவர்களும் காங்கேசன் துறை நீதிமன்றத்தால் 17-6-2011 வரை காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக 6-6-2011 அன்று இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்திடமிருந்து தொலைபேசி மற்றும் நிகரிமூலம் தகவல் பெறப்பட்டதைத் தொடர்ந்து, நான் மாண்புமிகு

பாரதப் பிரதமர் அவர்களுக்கு இதுபற்றிக் கடிதம் அனுப்பியுள்ளேன். நான்கு அப்பாவி மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க இலங்கை அரசை வற்புறுத்துமாறு அதில் நான் பிரதமர் அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளேன். மீனவர்களின் நலனைப் பேணிக் காக்கவும், அவர்களின் வாழ்வு மேம்படவும் எனது தலைமையிலான அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) வேலூர் மாவட்டம், அவலூர் அருகே கே.பி.என். டிராவல்ஸ் பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கே.பி.என். டிராவல்ஸ்-ஐச் சேர்ந்த படுக்கை வசதி கொண்ட குளிர் சாதனப் பேருந்து நேற்றிரவு சுமார் 9 மணிக்கு சென்னை கோயம்பேட்டிலிருந்து பொள்ளாச்சி நோக்கிப் புறப்பட்டது. இந்தப் பேருந்தில் 5 பெண்கள், 2 குழந்தைகள் உட்பட 23 பயணிகள் பயணம் செய்தனர். இந்தப் பேருந்தை திரு. நாகராஜன் என்ற ஓட்டுநர் ஓட்டிச் சென்றுள்ளார். இந்தப் பேருந்து py01 bh 9919 என்ற எண்ணில் புதுச்சேரியில் பதியப் பெற்றுள்ளது. இந்தப் பேருந்து சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில், சென்னையில் இருந்து சுமார் 100 கிலோ மீட்டர் தொலைவில் வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், அவலூர் என்னும் இடத்திற்கு அருகே சென்றபோது, அங்கு நின்றிருந்த லாரியைத் தவிர்க்கும் பொருட்டு, பேருந்தின் ஓட்டுநர் பேருந்தை திடீரென்று திருப்பியபோது, கட்டுப்பாட்டை இழந்து, சிறு பாலத்தின் தடுப்புச் சுவற்றில் மோதி, 10 அடி ஆழப் பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் குளிர்சாதன இயந்திரம் வெடித்து, தீப்பிடித்து, அதனால், இந்தப் பேருந்து முழுவதும் எரிந்து எலும்புக் கூடாகிவிட்டது. பேருந்து கவிழ்ந்து தீப்பிடித்த இந்த விபத்தில், அப்பேருந்தில் பயணம் செய்த 22 பேர் சம்பவ இடத்திலேயே, தீயில் கருகி உயிரிழந்தனர். திரு. கார்த்திகை ராஜன் என்ற ஒரே ஒரு பயணி மற்றும் பேருந்தின் ஓட்டுநர் இந்த விபத்தில் உயிர் பிழைத்துள்ளனர். பேருந்தின் ஓட்டுநர் திரு. நாகராஜன் வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் சரண் அடைந்தார். வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அவருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. பயணி,*